20.11.2025

O.S.No.88/2012

வா.சா.1.திரு.மதயாணை, த.பெ.திரு. மதயாணை.

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**10, 12, 13 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

5. நான் இந்த வழக்கு தாக்கல் செய்தபோது, 1, 2 பிரதிவாதிகள் மட்டும் தான் தரப்பினராக சேர்த்து வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் ஆமாம். என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் தாவா சொத்தில் 1/3 பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. 3 முதல் 13 பிரதிவாதிகளை எதற்கு இந்த வழக்கில் சேர்த்துள்ளோம் என்றால் அவர்களாக சேர்த்துள்ளார்கள். தாவா சொத்தின் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 5 ஏக்கர் 34 செண்டு மற்றும் ஒரு ஏக்கர் 34 செண்டு ஆகும். தாவா சொத்தின் சர்வே எண்.243/3-ல் 5 ஏக்கர் 16 செண்டு ஆகும். தாவா சொத்து சர்வே எண்.243/3 ஒரே சர்வே எண்ணாக உள்ளதா என்றால் தற்போது மூன்று எண்ணாக உட்பிரிவு செய்துள்ளார்கள். அந்த எண் எனக்கு தெரியாது. எனது தாயார் தான் இந்த வழக்கின் 1ம் வாதி ஆவார்.

6. 10, 12, 13 பிரதிவாதிகள் அவர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்தை தான் 1, 2 பிரதிவாதிகளுக்கு கிரையம் கொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. எங்களுக்கு பாத்தியப்பட்ட சொத்தை கிரையம் கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. எங்களுக்கு பாத்தியப்பட்ட நாங்கள் கோரும் 1/3 பாகச் சொத்தை எங்கள் முன்னோர்களே விற்பனை செய்துவிட்டார்கள் என்றால் சரியல்ல. எனவே, தாவா சொத்தில் பாகம் கோருவதற்கு எங்களுக்கு உரிமையல்ல என்றால் சரியல்ல. இந்த

**வழக்கை தாக்கல் செய்வதற்கு வழக்குமூலமே இல்லை என்றால் சரியல்ல.**

**வழக்கை தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.**

**<u>மறுவிசாரணை:</u>** இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

(திரு.P. மகாராஜன், எம்.எல்.,)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேலூர்.